முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

ம.சா. 2 தேதி.21.09.2023

| | | | |
|---|---|---|---|
| MCOP. No. | 73/2020 | | |
| பெயர் | Doctor. Sridhar | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் ஜி.வி. மருத்துவ மனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.09.2023 அன்று எனது மருத்துவ மனையில் பணியில் இருக்கும் போது மனுதாரர் சரண் வயது 23 என்ற நபர் அவருக்கு வலது கையில் வலி மற்றும வீக்கம் இருப்பதாக என்னிடம் பரிசோரனைக்காக வந்தார். அவரை பரிசோதனை செய்து எக்ஸ்ரே எடுத்து பார்த்ததில் அவருக்கு வலது கையில் பிலேட் மற்றும் கம்பி பொருத்தப்பட்டு இருந்தது, மேலும் எலும்பு கூடிய நிலையில் இருந்தது. அறுவை சிகிச்சை செய்து பிலேட் மற்றும் கம்பியை நீக்க வேண்டும் என்று நான் அறிவுரை கூறினேன். அதற்கு சுமார் ரூபாய் 50 ஆயிரம் வரை அனைத்து மருத்துவ செலவுகள் ஏற்படக் கூடும் என்று சான்று வழக்கிறேன். நான் எடுத்து பார்த்த நுண்கதிர் படம் மற்றும் நான் வழங்கிய சான்று எதிர்மனுதாரல் தரப்பில் பின்னா ஏற்படக் கூடிய செலவுகளுக்கு தோராயமாக சான்று வழங்க முடியாது என ஆட்சோபனை செய்து அதற்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது ம சா ஆ 15, 16 ஆகும்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 03.09.2023 அன்று மனுதாரரை பரிசோதனை செய்து 05.09.2023 அன்று சான்று வழங்கினேன். மனுதாரருக்கு எனது மருத்துவ மனையில் விபத்திற்கான சிகிச்சை எதுவும் வழங்கவில்லை. மனுதாரர் என்னிடம் சான்று பெற்ற பின்னர் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வரவில்லை. அதனால் மனுதாரர் எங்கு சிகிச்சை எடுத்து கொள்ள போகிறாா என்று எனக்கு தெரியாது. அவர் அரசு மருத்துவ மனியல் இதற்கான சிகிச்சை எடுத்து கொள்வதற்கு வசதிகள் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு சிகிச்சை எடுத்து கொண்டால் இந்த மருத்துவ செலவு ஏற்படாது என்றால் சரிதான். மனுதாரர் எந்த மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்து கொள்ள போகிறார் என்பது தொியாது

என்பதால் நான் வழங்கிய மருத்துவ சான்றினை ஏற்றுக் கொள்ள முடியாது என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை மனுதாரா் கேட்டு கொண்டதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள்.</u>